2024 – நவம்பர் மாதம் 07– ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 309 / 2019 C/W 310 / 2019*

*2024–ம் ஆண்டு நவம்பர் மாதம் 07– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 6, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 6, லட்சுமி |
| **கணவர்** பெயர் | : | சரவணன் |
| **ஊர்** | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| வயது | : | 49 |

<u>தேதி: **07.11.2024.**</u>

<u>**முதல் விசாரணை**:-</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சி ஆவேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது பெரம்பலூர் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகின்றேன். சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட அங்கீகாரக்கடிதம் **ம.சா.ஆ.12**, மங்கலமேடு காவல் நிலைய குற்ற எண் 79 /2019 வழக்கில் சம்மந்தப்பட்ட TN 45 N 2317 என்ற அரசு பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் பதிவுச்சான்று படிவம் 24 இணையதள நகல் **ம.சா.ஆ.13,** T N 46 X 1910 என்ற யமகா இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் பதிவுச்சான்று படிவம் 24 இணையதள நகல் **ம.சா.ஆ.14,** T N 46 X 1910 என்ற யமகா இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் விக்ரம் த/பெ. அன்பழகன் என்பவரின் ஓட்டுநர் உரிமம் எக்ஸ்ட்ராக்டின் கணிணி பதிவிறக்க நகல் **ம.சா.ஆ.15,** அவருக்கு ஓட்டுநர் உரிமம் 2028 வரை நடைமுறையில் உள்ளது. மேற்படி இருசக்கர வாகனம் ஆய்விற்க்கு வரும் போது 13.11.2018 முதல் 12.11.2023 வரை காப்பீடு நடைமுறையில் உள்ளது. மேற்படி

இருசக்கர வாகனம் ஆய்விற்க்கு வரும் போது முன்பக்க கண்ணாடி, சைடு கண்ணாடி, ஹேண்டில்பார், சென்டர்பாடி, முன்பகுதி முழுவதும் சேதம் ஏற்பட்டிருந்தது. ம.சா.ஆ.13–ன் படி அரசு பேருந்திற்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை. அரசு பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநரின் பெயர் கிருஷ்ணன் த/பெ. பச்சமுத்து, அரியலூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>குறுக்கு விசாரணை:– (எதிர்மனுதாரர் தரப்பில்)</u>

குறுக்கு விசாரணை இல்லை.

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**